**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 953/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW- 6 | Village: | |
| Name | : மணிசேகரன், | Age | :62 |
| Father's/Husband's Name | : சுப்பிரமணியன் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 22/09/2023**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

எதிரி ஆஜரில் இருந்தார்.

**முதல் விசாரணை**:

நான் சென்னை தடய அறிவியல் துறையில் இணை இயக்குநராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது தஞ்சாவூரில் வசித்து வருகிறேன். கடந்த 13/03/2018 ம் தேதி தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்கநராக பணியில் இருந்த போது கும்பகோணம் கால்நடை மருத்துவமனை அலுவலக பிரேத பரிசோதனை எண் 2/2018 மற்றும் 03/2018 நாள். 11/03/2018 வழக்கில் சம்மந்தபட்ட இரண்டு 1 வயதுடைய பெண் மயில்களின் உடல் உள் உறுப்புகளை உரிய முத்திரைகளுடன் 13/03/2018 ம் தேதி கும்பகோணம் சரக வன காவலர் திரு. ஜான்சன் கென்னடி என்பவர் மூலமாக பகுப்பாய்விற்கு பெற்றேன். முத்திரைகளை சரிபார்த்த பிறகு உடல் உள் உறுப்புகள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 1. குடல் பகுதி- இதில் போரைடு என்ற பூச்சிக் கொல்லி மருந்து கண்டறிப்பட்டது. 2. அரைவை பை பகுதி - போரைடு என்ற பூச்சிக் கொல்லி

மருந்து கண்டறிப்பட்டது. 3. இதயம் - போரைடு என்ற பூச்சிக் கொல்லி மருந்து கண்டறிப்படவில்லை. பிரேத பரிசோதனை எண். 03/2018 ல் காணப்பட்ட 4. குடல் பகுதி - போரைடு என்ற பூச்சிக் கொல்லி மருந்து கண்டறிப்பட்டது. 5. அரைவைப்பை பகுதி - போரைடு என்ற பூச்சிக் கொல்லி மருந்து கண்டறிப்பட்டது. 6 மற்றும் 7.- இதயம் மற்றும் ஈரல் - போரைடு என்ற பூச்சிக் கொல்லி மருந்து கண்டறிப்படவில்லை. 8. மேற்படி உடல் உள் உறுப்புகளை கெடாமல் பாதுகாக்க பயன்படுத்தப்பட்ட திரவம் - போரைடு என்ற பூச்சிக் கொல்லி மருந்து கண்டறிப்படவில்லை. போரைடு என்பது ஆர்கனோ பாஸ்பரஸ் பூச்சிக்கொல்லி மருந்து வகையை சார்ந்த ஒரு விசப்பொருளாகும் என்பதனை கால்நடை நஞ்சு இயல் ஆய்வக பகுப்பாய்வு எண்.277/2018 , 14/03/2018 நாளிட்ட அறிக்கையினை கும்பகோணம் கால்நடை மருத்துவமனை மருத்துவருக்கு அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக நான் வழங்கிய இரண்டு மயில்களுக்கான ஆய்வக **அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) வழக்கு சம்மந்தமாக வனவர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 953/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-5 | | |
| Name | : சையத் அலி, | Village: | |
| கால்நடை மருத்துவர் ஓய்வு | | Age | :58 |
| Father's/Husband's Name | : இஸ்மாயில் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 22/09/2023**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

எதிரி ஆஜரில் இருந்தார்.

**முதல் விசாரணை**:

நான் தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது தஞ்சாவூரில் வசித்து வருகிறேன். கடந்த 11/03/2018 ம் தேதி கும்பகோணம் கால்நடை மருத்துவமனையில் பிரதம மருத்துவராக பணியில் இருந்த போது கும்பகோணம் வனசரகம் வனகர் முருகானந்தம் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் படி இறந்து போன 2 மயில்களை பிரேத பரிசோதனை செய்து 2 மயில்களில் இருந்தும் சிறுகுடல், இரைப்பை , கல்லிரல், இதயம் ஆகிய பகுதிகளிலிருந்து மாதிரி எடுத்து தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து ஆர்கனோ பாஸ்பரஸ் என்ற நச்சு பொருள் இறந்து போன மயில்களின் இரப்பை மற்றும் சிறுகுடலில் இருந்ததாக அறிக்கை பெறப்பட்டது. அந்த

அறிக்கையின் அடிப்படையில் நான் இறந்து போன 2 மயில்களுக்கும் தனித்தனியாக பிரதே பரிசோதனை அறிக்கை வழங்கினேன். (**அந்த அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.,ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி அறிக்கைகளில் ஆர்கனோ பாஸ்பரஸ் விசம் கொடுத்ததால் மயில்கள் இறந்திருக்கலாம் என கருத்துரை வழங்கினேன். வழக்கு சம்மந்தமாக வனவர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**